(2024-25-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்) (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE 24 UTL 202**

**REG.NO:**

# என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி

## பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2025

இளநிலை பட்ட வகுப்புகள் மதிப்பெண்கள் : 75

அரசு உதவி (கணிப்பொறியியல்/வணிகவியல் நீங்கலாக) மற்றும்

சுயநிதி (பி.ஏ.தமிழ் இலக்கியம் மட்டும் )

இரண்டாம் பருவம் நேரம் : 3 மணி

**பகுதி** – 1

**தமிழ்த்தாள் - 2**

**பகுதி – அ** (**10x1=10** மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **(K1)**

1. அபிராமி அந்தாதியின் ஆசிரியர் பெயர்
   அ) குமரகுருபரர் ஆ) திருநாவுக்கரசர்
   இ) அபிராமி பட்டர் ஈ) சொக்க நாதபிள்ளை

2. ஆறாம் முறையைப் பாடியவர் ……………
   அ) சம்மந்தர் ஆ) சுந்தரர் இ) திருநாவுக்கரசர் ஈ) மாணிக்கவாசகர்

3. "பல்சான்றீரே பல்சான்றீரே" பாடல் இடம்பெறும் நூல் எது?
   அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) கலித்தொகை ஈ) குறுந்தொகை

4. தொகை நிலைத்தொடர் எத்தனை வகைப்படும்?
   அ) ஆறு ஆ) ஐந்து இ) நான்கு ஈ) மூன்று

5. பெரிய புராணத்தின் ஆசிரியர் பெயர் ………..
   அ) சேந்தனார் ஆ) சேதிராயர் இ) சேக்கிழார் ஈ) வேணாட்டடிகள்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. பாரதப் போரில் சோறிட்டவன் யார்?
7. பெரியோரை வியத்தலும் இலமே என்று கூறியவர் யார்?
8. வைத்தியம் , பரிகாரம், மருந்து, ஒரு வகை யாழ் என மருத்துவத்திற்கு விளக்கம் தரும் அகராதி?
9. "மான்விழி பார்த்தாள்" - என்ன தொடர்?
10. வையம் தகளியா வார்கடலே நெய்யாக என்று பாடிய ஆழ்வார்?

**பகுதி – ஆ** (5 x 5 = **25** மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** (K3)

11. அ) முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழில் இடம்பெறும் முத்தப்பருவம் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) குறத்தி செயல், குறி பார்த்தல் குறித்து எழுதுக. (த.பி.பா)

12. அ) திரிகடுகம் காட்டும் மருத்துவம் குறித்து விளக்குக .

(அல்லது)

ஆ) தமிழர்களின் இயற்கை வழிபாடு குறித்து எழுதுக.

13. அ) "நன்றே விடுஇனுந் தீதே விளை இனு நானறிவ தொன்றேயுமில்லை யுனக்கே" - இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.

(அல்லது)

ஆ) "இற்றை நாள் வரை முதல் யான் முன் செய்தன குற்றமும் உளவெனிற் பொறுத்தி கொற்றவ!" - இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.

14. அ) வேற்றுமைத்தொகை உருபுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) இடைச்சொல், உரிச்சொல், அடுக்குத்தொடர் சான்று தருக.

15. அ) பன்னிரு திருமுறைகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

ஆ) பன்னிரு ஆழ்வார்கள் பெயர்களைக் குறிப்பிடுக.

## பகுதி – இ (5x 8 = 40 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** **(K4 & K5)**

16. அ) திருமறைக்காடு தரும் செய்திகளை ஆராய்க

(அல்லது)

ஆ) நந்திக் கலம்பகம் குறித்து விளக்குக

17. அ) புறநானூற்றில் பொதுவியல் திணை - விளக்குக

(அல்லது)

ஆ) தமிழில் கல் வெட்டியல் குறித்து விளக்குக

18. அ) தீயினை நயந்தான் - உரைநடையை விளக்குக

(அல்லது)

ஆ) பெரியாழ்வார் திருமொழியை ஆராய்க

19. அ) "கனவுகள் மெய்ப்பட" தரும் செய்திகளை தொகுத்துரைக்க

(அல்லது)

ஆ) சாதிக்கலாம் வாருங்கள் - கட்டுரையினை சுட்டுக

20. அ) இந்திய ஆட்சிப்பணி தேர்விற்கு தயார் செய்தல் குறித்து நண்பனுக்கு கடிதம் வரைக

(அல்லது)

ஆ) உங்கள் ஊரில் பொது நூலகம் அமைத்தல் வேண்டி மாவட்ட நூலக அதிகாரிக்கு விண்ணப்பம் ஒன்று எழுதுக



*******